சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
★ ஒரே ஸ்தாபனம் ★
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 15 வியாழக்கிழமை 28 04 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 151

இன்றைய நாகரிகத்தின்
நவீன முன்னோடிகள்
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

# வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவிடம் 4 லட்சம் வாக்குகளினால் டி.பி. தோற்பார்!

## தேசிய உளவுப் பணியகம் அரசுக்கு ஆய்வறிக்கை

கொழும்பு, ஏப்ரல் 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு எதிராக மேல் மாகாண சபை முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க போட்டியிட்டால், அவர் நான்கு லட்சம் மேலதிக வாக்குகளைப் பெறுவார்,

தேசிய உளவுப் பணியகம் அரசுக்கு சமர்ப்பித்த ஆய்வறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.தே.கவின் அரசியல் ஸ்திரப்பாடு குறித்து ஆய்வொன்றை நடத்திய தேசிய உளவுப் பணியகம் (National Intelligence Bureau) கடந்த 7 ஆம் திகதி தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

தேசிய குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியான சேனக சில்வா தலைமையிலான 144 பொலீஸ் அதிகாரிகளைக் கொண்ட இந்த ஆய்வுக் குழு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இந்த ஆய்வை நடத்தியிருந்தது.

இந்த ஆய்வின் போது

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மண்முனையில் 4 தமிழர் படுகொலை

யாழ்ப்பாணம், ஏப். 28

மட்டக்களப்பு மண்முனைப் பகுதியில் உள்ள பெரியகாலை தோட்ட மடுவில் கடந்த வெள்ளியன்று நான்கு தமிழர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டதாக செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-5)

## தொண்டாவின் ஆதரவை பெற சு.க. இன்னும் முயற்சி

கொழும்பு, ஏப் 28

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் சுதந்திரக்கட்சி இன்னும் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான தொண்டமானுடன் சுதந்திரக்கட்சித் தலைவர்கள் சிலர் பலசுற்றுப் பேச்சுகளை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் தொண்டமானுக்கும் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் நிலவியவேளை டக் — அண்மைக்காலம் வரை — எதிரணியுடன் இணைந்து தொண்டமான் செயற்படக்கூடும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டதும் —

எனினும் பின்னர் ஜனாதிபதி — தொண்டமான் இடையேயான கருத்து வேறுபாடு நீக்கப்பட்டு விட்டதாக இம் மாத முற்பகுதியில் அறிவிக்கப்பட்டதும் தெரிந்தவையே. (உ-எ)

## கூச்சல் போராட்டம்; தெற்கில் ஏற்பாடு

கொழும்பு, ஏப். 28

காலி மாவட்ட அரச ஊழியர்களுக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கும் பயங்கரவாத காலக் கொடுப்பனவுகளை இன்னும் ஒருவார காலத்தில் வழங்காது போனால் 'கூச்சல் போராட்டம்' நடத்தப்போவதாக பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. எம். ஜயரத்தினா அறிவித்திருக்கிறார்.

காலி மாவட்டத்தில் உள்ள 81 ஆயிரம் அரச மற்றும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு பயங்கரவாத காலக் கொடுப்பனவின் முற்பணமாக முதலில் ஆயிரம் ரூபாவையேனும் வழங்கும்படி தென் மாகாண முதலமைச்சர் தொடங்காட விடுத்த கோரிக்கையை ஏற்று, அனுமதி வழங்க மாகாண ஆளுநர் மறுத்ததை ஆட்சேபித்தே இக் 'கூச்சல் போராட்டம்' நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## அரசுக்குப் பாடம் புகட்ட மக்கள் தயாராகிவிட்டனர்

### சிறிமாவோ சொல்கிறார்

கொழும்பு, ஏப். 28

கடந்த பதினேழு வருடங்களாக, கொலைகள் உட்பட தாம் நினைத்த அட்டூளியங்களை எல்லாம் மேற்கொண்டவர்களுக்கு — அரச கட்சியினருக்கு — நல்ல பாடம் கற்பிக்க மக்கள் தயாராகி விட்டனர்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

17 வருடங்களாக துன்பங்களை அனுபவித்து வந்த மக்கள் இன்று ஒன்றுதிரண்டு கிளர்ந்தெழுந்துள்ளனர்.

பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகிய போதும் அன்று வாய்மூடி மௌனிகளாக இருந்த மக்கள் இன்று ஜனநாயக விரோதச் செயல்கள் குறித்து கருத்துத் தெரிவிக்க

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்பை ரத்துச் செய்ய ஜனாதிபதி விஜேதுங்க திட்டம்

### ஆனால் தொண்டா எதிர்ப்பதால் அது ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 28

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்பை, சர்வசனவாக்கெடுப்பு நடத்தாமலே இரத்துச் செய்யும் அதிகாரம் தமக்கு இருப்பதாக ஜனாதிபதி விஜேதுங்கா கருதுகிறார்.

நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி "த ஐலண்ட்" நாளிதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இதற்கிணங்க இணைப்பை இரத்துச் செய்யும் பிரகடனத்தை ஜனாதிபதி விஜேதுங்கா விரும்புகிறார்.

ஆனால் நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் முடியும் வரை அதனை அவர் ஒத்திப்போட்டிருப்பதாக அப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைப்பை இரத்துச் செய்வதை அமைச்சர் தொண்டமான் தீவிரமாக எதிர்த்து வருகின்றார்.

இணைப்பை ரத்துச் செய்யும் பிரகடனத்தை இப்போது வெளியிடுவது எதிர்வரும் தேர்தல்களில் தொண்டமானின் ஆதரவை இழக்க வழிவகுக்கும் என்பதால்தான் ஜனாதிபதி விஜேதுங்கா தமது அறிவிப்பை ஒத்திவைத்துள்ளார் என்றும் 'ஐலண்ட்' தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேர்தல்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி

## 1 லட்சம் இளைஞரைத் திரட்டி மாதம் ரூ.1,500 வழங்க முடிவு

கொழும்பு, ஏப். 28

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்பதாக குறைந்தது ஒரு லட்சம் இளைஞர்களைத் திரட்டுவது என்றும் —

அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஆயிரத்து 500 ரூபா ஊதியமாக வழங்குவது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் புனரமைப்பு குழு முடிவு செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் எம். பிக்களின் ஒரு பிரிவினரை புனரமைப்புக் குழு சந்தித்தபோது இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் 200 இளைஞர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தேர்தலின் பின்னர் இவர்கள் அனைவரையும் அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் —

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களின் பெயர் விபரங்கள் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்பதாக வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.தே.க. புனரமைப்புக் குழு இது தொடர்பாக முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## பலாலி முகாமில் துருப்புகள் குவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

பலாலி இராணுவ முகாமுக்கு கப்பல்கள் மூலம் படையினர் கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறைக்கு வரும் உணவுக் கப்பல்களிலும் துருப்புகள் கொண்டு வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் மீது மேற்கொள்ளப் படவுள்ள இராணுவ நடவடிக்கைக்கான முன்னோடி நடவடிக்கையாகவே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர். [உ-5]

## மத்திய மாகாண உறுப்பினர் பாதுகாப்பு கோருகின்றனர்

கொழும்பு, ஏப். 29

தங்களுக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதால் அரசு தங்களுக்கு முழுப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என மத்திய மாகாண சபையின் அரசு மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

அண்மையில் மாகாண சபையின் கூட்டம் சபைத் தலைவர் சரத் கோனகாஹேனவின் தலைமையில் நடைபெற்ற போது உறுப்பினர்கள் இப்படிக் கோரிக்கை விடுத்தனர்.

மாத்தளை மாநகர சபை உறுப்பினர் ஒருவர் இவ்வாறு பாதுகாப்பு வழங்கும்படி கோரிய போதும் உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டிய உறுப்பினர்கள் அதனால் அவர் உயிரிழக்க நேரிட்டது என்றும் தெரிவித்தனர்.

எனவே மத்திய மாகாண சபை உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக உடனடியாக பாதுகாப்புக் குழு ஒன்றை அமைக்குமாறும் அவர்கள் கோரினர். [உ]

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன

## பணிப்பாளர் அலுவலகம் 'சீல்' வைத்து மூடப்பட்டது!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம் சீல் வைத்து மூடப்பட்டது.

அவரின் நடவடிக்கைகள் பற்றி விசாரணையை அரச அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுத்தாபனத்தில் 35 வருடகால சேவையைப் பூர்த்தி செய்த இவர் கடந்த ஆண்டு டிசம்பரில் ஓய்வுபெற்றார். பின்னர் அவர் கூட்டுத்தாபனத்தில் ஆலோசகராகப் பதவி வகித்து வந்தார்.

கடந்த மாதம் 2 ஆம் திகதி முதல் இவர் காணாமல்போய் விட்டதாக அறிவிக்கப்படுகிறது. அவர் எங்கு சென்று விட்டார் என்பது கூட்டுத்தாபன வட்டாரங்களுக்கு தெரியாதுள்ளது. (த-எ)

### அநுராதபுரம் முதல் கதிர்காமம் வரை

## சமாதானம் வேண்டி பெரும் பாதயாத்திரை

வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு எதிராகவும் —

சமாதானம் வேண்டியும் - அநுராதபுரத்திலிருந்து கதிர்காமம் வரை 532 கிலோ மீற்றர் தூர சமாதான யாத்திரை ஒன்று நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமான பாதயாத்திரை 35 நாட்களின் பின் மே மாதம் 29 ஆம் திகதி கதிர்காமத்தைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது பாதயாத்திரை செல்வோருடன் கூட 59 பௌத்த பிக்குகளும் செல்கின்றனர். அடுத்துவரும் நாட்களில் ஏனைய மத குருமார்களையும், பிரமுகர்களையும் பாத யாத்திரையில் வந்து சேர்ந்துகொள்ளும் படி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

பாதயாத்திரை நாளை பொலன்னறுவையையும், மே 5 இல் மட்டக்களப்பையும், மே 10 இல் அம்பாறையையும், மே 18 இல் மொனறாகலையையும் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கிய இடங்களை யாத்திரைக் குழுவினர் சென்றடைந்ததும் அங்கு கருத்தரங்குகளும்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தற்கொலை முயற்சி; தண்டனை இல்லை!

### இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்பு

"தற்கொலை செய்ய முயற்சிப்பது தண்டனைக்குரிய குற்றமல்ல"

— இந்திய உயர் நீதிமன்றம் வழக்கு ஒன்றில் இவ்வாறு நேற்று தீர்ப்பளித்தது.

தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களுக்கு தண்டனை வழங்கும் 309 ஆம் இலக்க சட்டத்தை குற்றவியல் கோவையில் இருந்து நீக்கிவிடுவது என்றும் உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களைத் தண்டிப்பது குரூரத்தன்மையானது; பகுத்தறிவுக்கு ஏற்றதாக இல்லை என்று தெரிவித்த உயர்நீதிமன்றம், அவர்களை உளவியல் சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும் என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டது.

## "காற்றுவெளி" திரைப்படம் நேற்று வெளியிடப்பட்டது

கோண்டாவில், ஏப். 28

விடுதலைப் புலிகளின் நிதர்சனம் அமைப்பு தயாரித்த "காற்று வெளி" திரைப்படம் நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வெளியீட்டு விழா நிகழ்ச்சி நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் தலைமையில் இடம்பெற்றது.

வெளியீட்டு உரையை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, நிகழ்த்தினார், திரைப்படத்தை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி வெளியிட்டு வைக்க, யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி அதனைப் பெற்றுக் கொண்டார்.

அடுத்து விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. தேவர் கலைஞர்களை அறிமுகம் செய்து வைத்தார் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் திரைப்படத்தில் பணியாற்றிய கலைஞர்க்கு பரிசு வழங்கி கௌரவித்தார்.

"காற்று வெளி" திரைப்படம் அகன்ற திரையில் காண்பிக்கப்பட்டது. (உ-85)

## இராணுவம் வெளியேறியதால் கிழக்கில் பாதுகாப்பு இடைவெளி

### மேலதிக பொலீஸார் வேண்டுமாம்

கொழும்பு, ஏப். 28

இராணுவம் வெளியேறியதால் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு இடைவெளியை நிரப்ப போதுமான அளவு பொலீஸாரை அனுப்பி வைக்கும்படி மட்டக்களப்பு மாவட்ட பொலீஸ் உயர்பீடம் பொலீஸ் தலைமைக் காரியாலயத்தை கோரியுள்ளது.

இதேவேளை— இம்மாவட்டத்தில் புதிதாக மூன்று அல்லது நான்கு பொலீஸ் நிலையங்களைத் திறப்பதற்கு பொலீஸ் தலைமைப்பீடம் நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையில்—

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொலீஸ் நிலையங்கள் எல்லாம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கல்லாறு என்னுமிடத்தில் உள்ள சோதனைச் சாவடியில் ... பொலீஸ் ... ஒருவரைக் ... பொலீஸ் ... ஒருவர் சுட்டுக் கொன்றுவிட்டு அவர் வைத்திருந்த ரி-56 ரக ரைபிளை கைப்பற்றிச் சென்ற சம்பவத்தை அடுத்தே உஷார் நிலை பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த எ)

### முச்சந்தி முரளி



அப்ப ...... வாரி வழங்கப் போகினம் போலை......

## சிறிமா இன்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுவார்

மணிலா, ஏப். 28

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அறுவைச் சிகிச்சைக்காக இன்று கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படவுள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

78 வயதான ஸ்ரீமாவின் உடல் நிலை காரணமாக அவரது மகளான சந்திரிக்கா குமாரணதுங்கவே அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

### சட்ட விரோதமாக

## ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல ஈழத்தமிழர் புதுயுக்தி

கொழும்பு, ஏப். 28

வட அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக பிரவேசிக்க இலங்கைத் தமிழர்கள் தென்னாபிரிக்காவைப் பயன்படுத்துவது தெரியவந்திருப்பதாக ராஜதந்திரிகளை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

போலி பயண ஆவணங்களுடன் ஜோஹன்னஸ்பேர்க் போய் இறங்கிய 20 இலங்கைத் தமிழர்களை தென்னாபிரிக்க அதிகாரிகள் கொழும்புக்கு நாடு கடத்திய சம்பவத்தை தொடர்ந்து, புதிய உத்தி அம்பலமானதாக தெரிவிக்கப்படுகிறது.

முதலில் சிங்கப்பூர் சென்றும் தமிழர்கள் அங்கு போலி பயண தஸ்தாவேஜுகளைப் பெற்றுக்கொள்கின்றனர் என்றும் —

பின்னர் அங்கிருந்து விமான மூலம் தென்னாபிரிக்காவின் டர்பன் விமான நிலையத்தைச் சென்றடைகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது.

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

மட்டுவில் திருக்கணித நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீவிஷ்ணு முகவர், பிரதான வீதி, சாவகச்சேரி. (30627)

**காவேரி சீயாக்காய்**

நுரை வளம்மிக்க காவேரி சீயாக்காய்ப் பவுடரின் தரம் நிரந்தரம். இப்போது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். சீயாக்காய் பவுடர் என்று கேட்காதீர்கள். காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். (30163)

**துளிர்**

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம், சந்தா ஏற்றுக் கொள்ளப்படும். (7324)

**தேவை**

தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளரும், எழுதுவினைஞரும் தேவை. சாவகச்சேரி நகர எல்லைக்கு அண்மையில் உள்ள ஆண், பெண் இருபாலாரும் சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பளிக்கு, பிரதான வீதி, சாவகச்சேரி. (3 621)

யாழ். மாநகர எல்லைக்குள் சாப்பாட்டு வசதியுடன் அறை அல்லது சிறிய வீடு ஆசிரியைக்கு வாடகைக்கு தேவை. கடித மூலம் தொடர்புகொள்ளவும். இல. 636, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (30620)

**மணமகன் தேவை**

38 வயது, விசாகம் 3ஆம் பாதம், கிரகபாவம் 55, ஜேர்மனி விஸா யாழ் உள்ளவருக்கு அழகிய, படித்த பெண் தேவை. ப. பராசசிங்கம், தொண்டாவில் றோட், கோப்பாய் தெற்கு. (30546)

**தவறி விட்டது**

23-4-94 அன்று சங்கானையில் இருந்து கிளாலி செல்கையில் பஸ்ஸில் சவுந்தரநாயகம் புஷ்பரத்தினத்தி 287480725V இலக்க தேசிய அடையாள அட்டை, கொழும்பு செல்லும் பாஸ் அடங்கிய றேஸ்கை 'பேர்ஸ்' தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். ச. புஷ்பரத்தினம், பிரதான வீதி, சங்கானை. (30616)

**இன்று விசாரணை**

மமு அமைச்சரவைக்கும் எதிராக உதவி ஆணையாளர் விஜய அந்தனி ஹெட்டியாராச்சி தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு இன்று வியாழக்கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகின்றது. (த-ஏ)

**பாரதி**
சித்தன்கேணி
**O/L DAY CLASS**
நடைபெறுகின்றன.
திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி
காலை 8 00 முதல் 2 00 வரை
[7082]

**O/L**
**DAY CLASSES**
(பகல்நேரவகுப்புகள்)
ஆரம்பமாகி விட்டன
அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/8047)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 06 01 1928
மறைவு: 09 05 1993

### திருமதி அற்புதம் மார்க்கண்டு


(ஓய்வு பெற்ற ஆசிரியை)

எங்கள் குடும்பத் தலைவியே! ஆண்டு ஒன்று சென்றாலும், உங்கள் நினைவலைகள் எங்கள் உள்ளங்களை விட்டு நீங்கவில்லை

உங்கள் ஆத்ம சாந்தியை நாடும்:
சகோதரர்கள், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்.

(7345)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லத்துரை வரதலிங்கம்

[இளைப்பாறிய அதிபர் – யாழ் / வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், முன்னாள் யாழ் மாவட்ட சாரண ஆணையாளர், தீவுப்பகுதி செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, தீவுப்பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கச் செயலாளர்]

மலர்வு: 25 – 09 – 1929
உதிர்வு: 12 – 05 – 1990

திதி: 28 – 04 – 1994

''என்னைச் சிறகினில் அணைத்திருந்து
எண்ணி நான்காண்டுகள்
ஓடி மறைந்தாலும்
ஓயாது...... இதயச் சிறைதனில்
பண்பாளர் உம் நினைவு
பாரினில் நிலைத்திடுமே......''

-குடும்பத்தினர்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை
(7348)

## 14th DEATH ANNIVERSARY



### LUTHER J. SELVARAJAH

FONDLY REMEMBERED
by his Wife – Ranee and
Children – Dushan & [illegible]

"Selva Giri"
57, Arasady Road,
Jaffna
[30537]

## இரட்டைச் சூட்டடுப்பு பாவனையாளர்களின் கவனத்திற்கு

※ இவ்வடுப்பில் உச்சப்பயன் பெற; நீண்ட பாவனைக்கு:

- ஒரே நேரத்தில் இரு அடுப்புத் தொகுதிகளையும் பயன்படுத்துங்கள்.
- தினமும் அடுப்பை எரிக்குமுன் சாம்பலை அகற்றுங்கள்.
- விறகுகளை சிறிய மெல்லிய துண்டுகளாகப் பிளந்து பாவியுங்கள்.
- ஈரமான விறகுகளையும் அதிநீளமான விறகுகளையும் பயன்படுத்துவதைத் தவிருங்கள்.
- பிரதான அடுப்பில் சுவாலை வெளியேறாதவாறும், துணை அடுப்பில் சுவாலை வெளியேறக்கூடியவாறும் பாத்திரங்களை வைத்துப் பயன்படுத்துங்கள்.
- வாரத்திற்கு ஒரு முறையாவது அடுப்பை மெழுகுங்கள்.

※ இவ் அடுப்புப் பாவனையின் போது நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தீர்விற்கு உடன் கடித மூலமோ நேரிலோ தொடர்பு கொள்ளுங்கள்.

'சக்திப் பகுதி'
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**
தமிழீழ விடுதலைப் புலிகள்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி, தமிழீழம்.
[சி-7916]

## ST JOHN'S COLLEGE JAFFNA OLD BOY'S ASSOCIATION ANNUAL REUNION

**SATURDAY 30th APRIL 1994**

**PROGRAMME**

| | |
|---|---|
| 7-00 a.m | Holy Communion Service |
| 8-15 a.m | Fellowship Break Fast |
| 9-00 a.m | Annual General Meeting |
| 10-00 a.m. | Cricket Old Boys Vs Present Boys |
| 1.00 p.m | Lunch |
| 1-45 p.m. | Cricket Match Continued |
| 4-00 p.m | Principal's Tea |
| 4-45 p.m. | Football: Old Boys Vs Present Boys |

Old Boys who wish to join in the Breakfast and Lunch are requested to obtain your tickets from the Treasurer Mr. T. Nanthakumaran at College on or before 10.00 a.m. on Friday, 29th April.

Rates: Breakfast — Rs 25.00
Lunch Rs 65.00

Members who fail to receive our notification by post, kindly accept this intimation.

**T SELVARAJH.**
(Hony. Secretary).

22/12, Bharathy Lane,
Chundikuli
[30626]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 01 – 08 – 1939
மறைவு: 15 – 03 – 1994

### அமரர் சுந்தரம் யோகசுந்தரம்

(ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்)

அன்பும் பாசமும் உள்ள அப்பா! நீங்கள் அன்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், எல்லோருக்கும் அன்பாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தலைவர். அப்பா! எங்கள் முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் வழிகாட்டியாய் இருந்த அன்புத் தெய்வமே! எங்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்து ஒன்றரை மாதம் ஆனாலும் உங்கள் உருவமும் நினைவும் எங்கள் மனதை விட்டு எப்போதும் நீங்காது மனதில் மறையாத் தெய்வத்திற்கு மலர் முத்தங்கள். எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (28-04-1994) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

அன்பு மனைவி,
மகள், மகன், உறவினர்கள்.

85, சுப்பிரமணியம் வீதி,
[illegible]
யாழ்ப்பாணம்.
(30613)

**வீடியோ படக்காட்சி**

1-5-1994 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இல. 27, நக்கீர ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
**JAFFNA ENGLISH ACADEMY** இல்
J. Krishnamurti ஜே. கிருஷ்ணமூர்த்தியின் சொற்பொழிவு வீடியோவில் காண்பிக்கப்படும்.
இலவசம் அனைவரும் வரலாம்.
(சி/7949)

வடலியடைப்பு கும்மந்தவத்தை
**ஞான வைரவர் ஆலயம்**
**மண்டலாபிஷேகம்**

இன்று 11 ஆம் நாள் நிகழ்வு
**28-04-1994** மாலை 6-30 மணி
※ சிறப்புச் சொற்பொழிவு:
கம்பன் கழக உறுப்பினர்
**திரு. ஆறு. திருமுருகன்**
B A.
விடயம்: ''அன்பே சிவம்''
– 11ஆம் நாள் உபயகாரர்.
[30599]

**திரு ரியூசன் சென்ரர்**
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

**A/L 96**

புதிய பிரிவு II
கலை வர்த்தக வகுப்புகள்
**ஆரம்பம்: 30 – 04 – 1994**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| இந்துசமயம் / இந்து நாகரீகம் | — | திரு. சோதி |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| தமிழ் | — | திரு குழந்தை |
| புவியியல் | — | திரு. வேலா |
| அரசியல் | — | திரு நவம் |
| நாடகமும் அரங்கும் | — | திரு சத்தியா |

அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்யவும்
[சி/9854]

**கலை, வர்த்தக கல்லூரி**
**C. C. A.**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

கலை, வர்த்தகம்
**G. C. E. A/L 96**
புதிய பிரிவு

எமது வழமையான ஆசிரியர்குழு:
**ஆரம்பம்: 30-04-1994**
சனிக்கிழமை காலை 8மணி
குறிப்பு:
மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் இன்று முதல் பதிவு செய்து உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளுங்கள்.
– நிர்வாகி,
[சி 8040]

**LONDON ACCOUNTANCY**
**CLASSES NOV / DEC - 1999**
C. I. M. A. – STAGE-I
A. A. T. – PRELIM
– INTER
I. A. B – FOUND
(INTER & FINALS – ஆரம்பம்: 18-06-1994)
**ஆரம்பம்: 07-05-1994**
விபரங்களுக்கு;
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St PETER'S LANE
JAFFNA.
[C-7945]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அரசியல் அவிவேகம்!

யாழ்ப்பாணக் குடாநாடு மீதான இராணுவத் தாக்குதலை அடுத்த மாதத்தில் ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி விஜேதுங்கா அரசாங்கப் படைகளுக்கு அங்கீகாரம் வழங்கி விட்டார்.

வடமராட்சி மீதான பெரும் இராணுவத் தாக்குதலுக்கு முன்னோடியாக, விமானத் தாக்குதலுக்கும் உத்தரவிடப் பட்டாகிவிட்டது.

யாழ்ப்பாணத்தின் மீது பெரும் தாக்குதலை — இறுதித் தாக்குதலை — நடத்துவதற்கு இதுவரை 70,000 துருப்புக்கள் இப்பகுதியில் குவிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. கிழக்கில் நிலைகொண்டிருந்த படைகளில் பெரும்பகுதியினர் வடக்கே கூட்டிவரப் பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கையால் தாம் கண்ட பெரும் தோல்விகளுக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லாப் படை அதிகாரிகளிடமும் உண்டு. தேர்தல் நடக்கிறதோ இல்லையோ; அரசியல் அரங்கம் சீராக இருக்கிறதோ குழம்பிக் கலங்கிச் சீரழிகிறதோ; அவற்றைப் பற்றி எல்லாம் இராணுவ உயர் அதிகாரிகளுக்குக் கவலை ஏது?

விடுதலைப் புலிகளை விடத் தாம் பலமானவர்கள் என்பதைக் காட்டிவிட வேண்டும். யுத்தத்தைத் தொடர்வதன் மூலம் ஆயுதக் கொள்வனவு, துருப்புகள் பராமரிப்பு என்பனவற்றில் கிடைக்கக்கூடிய வெட்டுகள், தரகுகள் என்று பணம் சம்பாதிக்க வேண்டும். இந்த இரண்டு நயங்களையும் இழந்துவிடக்கூடாது என்பதிலேயே அவர்களுக்கு அதிக அக்கறை.

யாழ்ப்பாணத்தின் மீது பெருந்தாக்குதல் ஒன்றை நடத்தும்போது பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள், நிராயுதபாணிகள் உயிரிழப்பார்கள் என்பது நன்றாகத் தெரிந்தும், அதனைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் அளவுக்குப் படை உயர் அதிகாரிகளிடம் மனிதநேயம் இல்லை. தமிழர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்ற எண்ணத்துடனே ஆட்சியாளர்கள் நீண்டகாலமாக காரியங்களை ஆற்றியதால், தமிழர்கள் ஜன்மப் பகைவர்கள் என்ற உணர்வு படை அதிகாரிகள் மனங்களில் ஊறிவிட்டது.

ஆனால் யாழ்ப்பாணம் மீதான மே மாதத் தாக்குதலுக்கு ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துவிட்டார் என்பதுதான் ஆராய்வுக்குரியது. தென்மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர், இனத்துவேசத்துக்கும், யுத்தத்துக்கும் எதிராக சிங்கள மக்கள் வாக்களித்த பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி பிளவுறும் நிலையை எய்தியிருக்கும் வேளையில், தமது தலைமைப் பதவியைத் தக்க வைக்கத் திண்டாடும் வேளையில், யுத்தத்தைத் தொடர்வதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியிருப்பது அவரின் அரசியல் அவிவேகத்தையே காட்டுகிறது.

ஆளுங்கட்சியின் தலைமைப் பதவியைத் தக்க வைக்கவும், மீண்டும் ஜனாதிபதியாக சிம்மாசனம் ஏறுவதற்கும் தேவையான அரசியல் ஓட்டுவேலைகளில் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி, இன்னும் தமிழருக்கு எதிரான போக்கை மாற்ற முனையவில்லை என்பதற்கும் அவரது அங்கீகாரம் சான்றாக உள்ளது.

தமிழர்களின் இதயங்களை வென்று அவர்களின் வாக்குகளைப் பெறவேண்டும் என்ற ஆலோசனையைப் புறந்தள்ளி அதற்கு மாறாக தமிழர்களைக் கொன்று அவர்களின் வாக்குகளை இல்லாமற் செய்ய வேண்டும் என்ற கொள்கையையே அவர் நிரந்தரமாக வரித்துக் கொள்கிறார் போலும்!

இராணுவ வெற்றியைக் காட்டிச் சிங்களவர்களின் வாக்குகளைப் பெறுவது கடினம் என்ற நிலை வந்த பின்னரும், தேர்தல் ஆண்டிலே யுத்தத்தைத் தொடர அங்கீகாரம் வழங்கியிருக்கும் விஜேதுங்கா, ஏனைய சிங்களத் தலைவர்களை எல்லாம் கீழே தள்ளிக்கொண்டு முதலாம் இலக்கத் தமிழர் எதிரியாகிறார்!

# அணுஆயுத பரவல் தடுப்பு; அமெ.- இந்தியா ரகசிய பேச்சு

லண்டன், ஏப். 28

பிரச்சினைக்குரிய அணு ஆயுதப் பரவல் தடுப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பாக இந்தியா அமெரிக்காவுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரகசியப் பேச்சு லண்டனில் தற்போது நடத்தப்பட்டு வருவதாக ரைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகைச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அணு ஆயுதப் பரவல் தடுப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட இந்தியா மறுத்து வருவது தெரிந்ததே. பாகிஸ்தான் அணுக்குண்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதால் அணு ஆயுதப் பரவல் தடுப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தற்கொலைக்கொப்பான செயல் என்று இந்தியா தனது நிலைக்குக் காரணம் காட்டி வந்திருக்கிறது. பாகிஸ்தானும் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட மறுத்து வருவதற்கும் இதே காரணத்தைக் கூறிவருகிறது.

தெற்காசியாவை அணு ஆயுதமற்ற பிராந்தியமாக வைத்திருக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டும் அமெரிக்கா, அணு ஆயுதப் பரவல் தடுப்பு உடன்படிக்கையில் இவ்விரு நாடுகளும் கைச்சாத்திட வேண்டும் என்று வற்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை —

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அடுத்த மாதம் 17 முதல் 19ஆம் திகதி வரை அமெரிக்காவில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுகிறது. (த-எ)

## தி.மு.க சின்னத்தை பாவிக்க வை. கோவிற்குத் தடை!

சென்னை, ஏப். 28

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி, சின்னம் ஆகியவற்றைப் பயன்படுத்த முடியாதென வை. கோபாலசாமி தலைமையிலான தி.மு.கவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நிரந்தரத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தி.மு.க பொதுச்செயலாளர் க. அன்பழகன் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த சென்னை உயர் நீதிமன்றம் தி.மு.கவின் சின்னம், கொடி ஆகியவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்று வை கோ. அணியினருக்கு இடைக்காலத்தடை உத்தரவைப் பிறப்பித்தது. இதனை ஆட்சேபித்து வை கோ. அணி உயர்நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்தது.

இப்பதில் மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கோவர்த்தனன், இடைக்காலத் தடை உத்தரவை நிரந்தரத்தடை உத்தரவாகப் பிறப்பித்ததுடன் — பதில் மனுவையும் தள்ளுபடி செய்தார். (த-எ)

## 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர்

# மீளளிக்காத விவசாய கடன்; ரத்துச் செய்யத் திட்டம்!

கொழும்பு, ஏப். 28

1976 ஆம் ஆண்டுக்குப் பின்னர் திருப்பிச் செலுத்தப்படாதிருக்கும் விவசாயக் கடன்களை ரத்துச் செய்துவிடும் திட்டம் ஒன்றை விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சித்துறை அமைச்சு தயாரித்துள்ளது.

இதன்படி பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ள விவசாயி ஒருவர் தம்மால் ஏன் அந்தக் கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை என்பதற்கான காரணங்களைக் கொண்ட மேன்முறையீடு ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் —

அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு ஒன்று அம்முறையீட்டை பரிசிலனை செய்த பின்னர் தமது அறிக்கையை அமைச்சுக்குச் சமர்ப்பிக்கும் என்றும் —

அதன் பின்னர் அக்கடன் கழித்து விடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேன்முறையீடுகளை பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவில் — திறைசேரி, நிதி அமைச்சு, விவசாய அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் —

கமத்தொழிற் திணைக்கள ஆணையாளர், மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு ஆளாகியதன் காரணமாக பொலன்னறுவை மாவட்டத்தில் 13 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர் என வெளியாகிய செய்திகளைத் தொடர்ந்து அமைச்சர் அவசர மாநாடு ஒன்றை நடத்தினார். அந்த மாநாட்டிலேயே அமைச்சர் இத்திட்டத்தை வெளியிட்டார். (த-எ)

# விளையாட்டு நிகழ்வுகள்

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் இணுவிலில் உள்ள மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி:- ஒஸ்கா வி.க எதிர் விநோத் வி.க.

★ 4.00 மணி:- உதயசூரியன் வி.க. எதிர் மானிப்பாய் சென்ட்ஸ்ரார் வி.க.

★ ★ ★

ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் சுற்றுப் போட்டிகளில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

மென்பந்து கிரிக்கெட்

★ 3.00 மணி:- சரஸ்வதி வி.க. எதிர் ஐங்கரன் வி.க "ஏ"

கரபந்து ("செற்—அப்")

★ 4.00 மணி:- யங் றோயல் வி.க எதிர் சிற்றம்பலம் வி.க.

கரபந்து ("ஓவர்")

★ 2.30 மணி:- அம்பாள் வி.க. "ஏ" எதிர் ஊரோ வற்றுறை ப.நோ.கூ.ச

★ ★ ★

கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை மாலை 4.30 மணிக்கு அரியாலை ஐக்கிய வி.க மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் சென். மேரீஸ் வி.க. அணியை எதிர்த்து சென். அந்தனிஸ் அணி மோதும்.

முன்னதாக நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் — மூன்றாம் இடத்தைப்பெறும் அணியைத் தெரிவுசெய்வதற்கான — ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து ஹென்றிஸியன் அணி மோதும். [உ]

# தேவாலயத்தை தகர்க்க புதுவையிலும் அச்சுறுத்து

பாண்டிச்சேரி நகரில் (புதுவையில்) உள்ள அன்னை அமலஉற்பவ மாதா தேவாலயத்தை தகர்த்துவிட்டு அவ்விடத்தில் சிவன் கோவில் ஒன்றை கட்டப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்து முன்னணி எனப்படும் இந்து மத அடிப்படைவாத இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான ராவ் விஸ்வலிங்கம் இதனை நேற்றுப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

தேவாலயத்தைத் தகர்ப்பதற்காக தமிழ் நாட்டிலும், பாண்டிச்சேரியிலுமாக சுமார் 2 லட்சம் பேரை இந்து முன்னணி திரட்டவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அன்னை அமலஉற்பவமாதா தேவாலயம் 1748 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு ஆளுநர் டூப்ளிக் சியாட்டினால் கட்டப்பட்டது.

தமிழகம், நாகபட்டினத்தில் உள்ள அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்தையும் தகர்க்கப் போவதாக —

இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் அச்சுறுத்தியதும் —

அதனைத் தொடர்ந்து அந்தத் தேவாலயத்துக்கு முழுப் பாதுகாப்பு வழங்க தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டதும் தெரிந்ததுவே. (அ-5)

# மக்கள் முன்னணி பதவிக்கு வந்தால் யுத்தநிறுத்தமாம்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அடுத்த தேர்தலில் பதவிக்கு வருமானால் அது வடக்கு — கிழக்கில் யுத்த நிறுத்தம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவரும்.

யாழ். மாவட்ட எம்.பி. ... நகரத்தின... மன்றத்தில் அவர் ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் வானொலியில்

28-04-1994

வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுகள் பார்க்கலாம்.

★ 8-10 — உரை - நில அடி நீரை தேக்குவோம்.

★ 8-20 — உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் நம் பிக்கையே வாழ வைக்கும் - உரையாடல்.

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — ஏட்டிலிருந்து — "மௌன வசந்தம்" என்ற நூலிலிருந்து பூச்சிகள் திருப்பித் தாக்குகின்றன எனும் கட்டுரையின் சில பகுதிகள்.

★ 8-50 — மலரும் மொட்டுக்கள்.

29-04-1994

வெள்ளி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்.

★ 7-15 — விடுதலை கானங்கள்

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — தொடர்ந்து விடுதலை கானங்கள்.

## இன்று

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழன் முறையே பிற்பகல் 2.30மணிக்கும் 3.30 மணிக்கும் நடைபெறும் என்றும் —

சகல அதிபர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கேட்டுள்ளார். (த)

★ ★ ★

சண்டிலிப்பாய் வட்டத்துக்கு உட்பட்ட — பதிவு செய்த, பதிவு செய்யாத — கழகங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று சண்டிலிப்பாய் வட்டப் பொறுப்பாளர் திரு இளந்திரையன் தலைமையில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

### ஐரோப்பிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிச் சென்ற 20 இலங்கைத் தமிழர்களே ஜோஹனர்ஸ்பேர்கில் தரை இறங்கிய போது பிடிபட்டனர்.

இவர்களுடன் கடந்த சில வாரங்களில் மேலும் பல இலங்கைத் தமிழர்கள் கொழும்புக்கு தென்னாபிரிக்க அதிகாரிகளினால் திருப்பி அனுப்பிவைக்கப் ட்டனர்.

ஆட்களை சட்டவிரோதமாக மேற்கு நாடுகளுக்கு அனுப்புபவர்கள் கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள கென்யா, உகண்டா விமான நிலையங்களையும் பயன்படுத்தி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம் (த-எ)

### அடிசுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துள்ளார்கள் ... ஐ.தே.க. அரசை எதிர்ப்பது இயற்கையானதே.

ஸ்ரீலங்காவின் அரசியல் போக்கு சமீப காலத்தில் புதிய பயங்கரப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அதனை நிறுத்த மக்கள் தங்கள் வாக்கு ... தேர்தல்களின் ... பட்டுள்ளது. [அ-6]

## சமூகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 28

தெல்லிப்பழை- சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமையாற்றும் சாதாரண பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் [நிரந்தர உதவி ஆசிரியர் நியமனம் வழங்குதல் தொடர்பாக] நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கும் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தொலைக் கல்வி பயிற்சி நெறி சம்பந்தமான பரீட்சைத் தகவல்களையும், முன்னர் தங்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதம், கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் ஆகியவற்றையும் கொண்டு வருமாறு வேண்டப்படுகின்றனர். (க-152)

## முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ். செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தினால் சரவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நாளையும் நாளை மறுதினமும் பின்னர் எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 5 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணி வரையு நிறுவைகள் அளவைகளுக்கு முத்திரையிடப்படும் (க-30)

## பாதுகாப்பு அதிகாரியாக ஆஸ்திரியர்

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் உள்ள ஐ.நா. அகதிகள் தூதரகத்தின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியாக ஆஸ்திரிய பிரஜையான திருமதி கோயப்ன கொட்றைட் பதவி ஏற்றுள்ளார்.

இது வரை காலமும் அப்பதவியை வகித்து வந்த டாக்டர் பீற்றர் நிக்கொலஸ் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (த-எ)

## தலைநகரில் பிரேமா, லலித் சுவரொட்டிகள்

கொழும்பு, ஏப். 28

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு தலைநகரிலும் நாட்டின் பல இடங்களிலும் அவரின் முழு அளவிலான உருவப் படங்களுடன் கூடிய சுவரொட்டிகள் ஒட்டப் பட்டுள்ளன.

இதேவேளை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மறைந்த தலைவர் லலித் அத்துலத் முதலியின் நினைவு கூர்ந்தும் கொழும்பில் பல இடங்களிலும் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

அந்த சுவரொட்டிகளில் "நொமியன மினுசு" (சாகாத மனிதர்கள்) என்ற வாசகமும் காணப்படுகின்றன. (ஓ-5)

## மேதின ஏற்பாடு: கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 28

எதிர்வரும் மே தினம் தொடர்பான ஒழுங்குகளைத் திட்டமிடுவது குறித்தும் பரிசீலனை செய்வது குறித்தும் ஆராய்வதற்காக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவு நாளை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸின் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு கிழக்கு, யாழ். —நல்லூர், தீவகம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பொறுப்பாளர்கள், உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள் மேற்படி கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

### சமாதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதி நாடகங்களும் நடத்தப்படுகின்றன.

அநுராதபுரம் சர்வோதய நிலையத்திலிருந்து ஆரம்பமான பாதயாத்திரை தலாவ, மின்னேரியா, பொலன்னறுவை, சுங்கம, வாழைச்சேனை, செங்கலடி, கல்முனை, அம்பாறை, அக்கரைப்பற்று, மொனராகலை, வெல்லவாய லுணுகம ஆகிய இடங்கள் ஊடாக கதிர்காமத்தைச் சென்றடையும். (உ-9)

# துப்பாக்கிகளுக்கு லைசன்ஸ்; புதிய சட்டமூலம் வரும்!

கொழும்பு, ஏப். 28

துப்பாக்கிகள் வைத்திருக்க வழங்கப்பட்ட லைசன்ஸ்கள் அனைத்தையும் ரத்துச் செய்துவிட்டு, புதிதாக விண்ணப்பங்களைக் கோரி அவற்றைப் பரிசீலனை செய்த பின்னர் லைசன்ஸ் வழங்க வழி வகுக்கும் புதிய சட்டமூலம் ஒன்றை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளை மாநகரசபை உறுப்பினர் ஹசேன் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பாக சட்டமா அதிபர் திலக் மாரப்பன ஜனாதிபதி விஜேதுங்காவை சந்தித்து பேசினார்.

புதிய சட்டவிதிகளின் கீழ் குற்றமிழைப்போர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்று சட்டமா அதிபர் தெரிவித்தார். (த-எ)

## பல்கலை. அனுமதி பெற்றோர்

# ஆங்கில பயிற்சி நெறிக்கு பெயர்களைப் பதியலாம்

1992 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கான பொது ஆங்கில மொழி பயிற்சி நெறிக்கு பெயர்களை பதிவு செய்தல் மே மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அறிவித்துள்ளது.

மாணவர்கள் தாம் விரும்பும் "கெல்ட்" ஆங்கில பயிற்சி நிலையத்தில் பெயர்களை விரைவில் தினமும் 2மணி தொடக்கம் 4 மணி வரை பதிவு செய்து கொள்ளலாம்.

அவர்கள் பல்கலைக்கழக அனுமதிக் கடிதத்தை எடுத்துச் செல்ல வேண்டும், இவ்வாறான அனுமதிக் கடிதம் மே மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்காவிட்டால் மாணவர்கள் அதுபற்றி பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவின் ஆங்கில மொழிப் பகுதியில் மே மாதம் 12 ஆம் திகதி வரை வார நாட்களில் 9 மணி தொடக்கம் 12 மணி வரை விசாரிக்க முடியும் (த-162)

# யாழ் - வன்னி தபால் சேவை; துரிதப்படுத்த நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்- வன்னி தபால் சேவையை 'பிளாம்பயான்' கப்பல் மூலம் துரிதமாக நடத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், பரந்தன் போன்ற தபாலகங்களுக்கு திருகோணமலை ஊடாக 'பிளாம்பயன்' கப்பலில் தபால்களை அனுப்பவும் அங்கிருந்து எடுத்து வரவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் இது வரை காலமும் மந்தகதியில் செயற்பட்டு வந்த யாழ்- வன்னி தபால் சேவையும் ஓரளவு சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த-162)

## நேற்று அதிகாலை

# தென்னாபிரிக்காவின் புதிய தேசிய கொடி ஏற்றப்பட்டது

ஜோஹன்னஸ் பேர்க், ஏப். 28

350 ஆண்டுகால நிறவெறிமைக்கு முடிவு கட்டி நேற்று உதயமான புதிய தென்னாபிரிக்காவின் புதிய தேசியக் கொடி ஆறு நிறங்களில் அமைந்துள்ளது.

சிறுபான்மை வெள்ளை இன ஆட்சியின் சின்னமாக இருந்து வந்த தேசியக் கொடி நேற்று நள்ளிரவில் இறக்கப்பட்டு, புதிய தேசியக்கொடி அதிகாலை 12-01 இற்கு ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை தென்னாபிரிக்க மக்கள் கொண்டாடினார்கள்.

நிற வேற்றுமையை ஒழிக்க புதிய இடைக்கால அரசமைப்பு நேற்று முன்தினம் அமுலுக்கு வந்தது.

இதனிடையில்— நேற்று இடம் பெற்ற வாக்களிப்பின் போது ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா முதல் தடவையாக தமது வாக்கை அளித்தார்.

"எனது கனவு நனவாகியது" என்று பின்னர் டாக்டர் மண்டேலா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஆரம்பமான 3நாள் வாக்களிப்பில் நேற்றுத் தான் கறுப்பின மக்கள் முதல் தடவையாக வாக்களித்தனர். இன்றும் வாக்களிப்பு இடம் பெறும்.

வாக்குகள் எண்ணப்படுவது நாளை (வெள்ளிக்கிழமை) ஆரம்பமாகும். முடிவுகள் ஞாயிறு அளவில் வெளியாகும்.

இதேவேளை—

ஜோஹன்னஸ்பேர்க்கின் சர்வதேச விமான நிலையத்தில் பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றது. காரில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தது- எவரும் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## வெள்ளி விழா

யாழ்ப்பாணம், ஏப் 28

ஸ்ரீ காமாட்சி சன சமூக நிலைய வெள்ளி விழா இன்று வியாழன் மாலை 6.30 மணிக்கு நிலைய முன்றலில் ஆரம்பமாகி நடைபெறும்.

விழாவில் இசையமைப்பாளர் கண்ணன் பாராட்டி கௌரவிக்கப்படுவார். தொடர்ந்து வருடாந்த பரிசளிப்பு மலர் வெளியீடு இன்னிசைக் கச்சேரி நாடகம் ஆகிய இசை விருந்து ஆகியவை இடம்பெறும் (த)

## நிறுத்தல் அளவை முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஏப் 28

கரவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகாமையில் வைத்து இன்றும் நாளையும் எதிர்வரும் 3, 5, 6 ஆம் திகதிகளிலும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படவுள்ளது. (உ-162)

### வரும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டமான் ஐ.தே.கவுடன் சேர்ந்திருந்து தேர்தலில் பங்குபற்றுவார் என்றே எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆய்வுக் குழுவினர் இந்த ஆய்வின் போது வடபிரதேசத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்றும் —

ஏனைய பகுதிகளிலேயே ஆய்வு நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேசிய உளவுப்பணிப் பணிமனை தென்மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக அத்தேர்தலில் ஐ.தே.க. தோல்வியையே தழுவும் என அறிக்கை சமர்ப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## நாளை நடப்பவை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு சிவசிறி செ. விஸ்வநாதக் குருக்கள் 'பன்னிரு திருமுறைகள் பக்திப்பாடலும்' எனும் பொருள் பற்றிஉரை நிகழ்த்துவார். திரு. சி. குழந்தைவேலு அறிமுகவுரை ஆற்றுவார் (க)

★ ★ ★

கல்வி நிர்வாக சேவை அலுவலர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு கல்வி திணைக்கள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது (உ)

பட்டமரம் மட்டும் எடு
பதிலுக்கு இரு மரம் நட்டு வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். ஸ்ரீதர் திரையில்
**28 - 04 - 1994** வியாழன் முதல்
உங்கள் கண்ணெதிரில்
## போராளிகளும் மக்களும்
இணைந்து வழங்கும்
**நிதர்சனம் நிறுவனத்தின்**
சிறப்பு வெளியீடு

# காற்று வெளி

(முழுநீள வண்ணப் படம்)

- மக்களோடு புலிகள்
- சண்டைக் காட்சிகள்
- நெஞ்சையுருக்கும் சம்பவங்கள்

உங்கள் இதயங்களில் இடம் பிடிக்கும்
இன்னும் பல அரிய கண்ணைக் கவரும்
வண்ணக் காட்சிகள்

**மறவாதீர்கள் காற்று வெளி**
**தவறாதீர்கள் பார்த்து மகிழ**

கதை
வசனம்
நெறியாள்கை
ஞானரதன்

ஒளிப்பதிவு: தவா, திலகன், நியோ
நடிகர்கள்: நியோ, இரட்ணவடிவேல், பேபி சரோஜா, நிசாம், மற்றும் பலர்
இசை: பிரிபாஜ், முரளி

தயாரிப்பு:
**நிதர்சனம்**

[சி-8031]


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை கண்மணிநாயகம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லதம்பி சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியான கண்மணிநாயகம் கடந்த 22-4-94 இல் மரகமவில் காலமானார்.

இவர் ஜெயலக்சுமிதேவி, ஸ்ரீகாந்தராசா (ஓய்வு பெற்ற உதவி தபாலதிபர்), ஸ்ரீகரராசா, ஸ்ரீகாந்தகுமாரி, பரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருளானந்தம், சிவயோகம், யோகராணி, பரமலிங்கம், விஜயநிர்மலா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீகாந்தலக்சுமி (உதவி நூலகர் யாழ். பல்கலைக்கழகம்), குபேரானந்த உதயன், ஸ்ரீகாந்த ரூபி (நுண்கலை பீடம் யாழ். பல்கலைக்கழகம்), ஆனந்தலக்சுமி, ஆனந்தவதனி, குகதாஸ், முகுந்தன், அகிலன், பிரியதர்சினி, அனுஷா, ஜெயவதனி, ஜெயவதனன், ஸ்ரீ வாஸ்டன், வாகீசன், சுகந்தன், சுதர்சன், நிருபன், தவ்வியா, நிதர்சன் ஆகியோரின் அன்புப் பாட்டியாருமாவார்.

அன்னாரது பூதவுடல் கடந்த 22-4-94 வெள்ளிக்கிழமை 4 ஆஸ்பத்திரி வீதி, ஜயனத் மனாச்சாலை, மகரகமவில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்;
சி. ஸ்ரீகாந்தராசா
(மகன்)

(30631)

### ஐயம்பெருமாள் வேலாயுதம்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கின்னர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்ற ஐயம்பெருமாள் ஆச்சாரி பொன்னம்மாள் ஆகியோரின் அன்பு மகனுமாகிய (மகன்) வேலாயுதம் 27-04-94 இல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 28-04-94 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஐ. சுப்பையா
சகோதரர்

இல 185/1, கின்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(30634)

### சுப்பிரமணியம் இராசையா

[ஓய்வுபெற்ற உப அதிபர், மல்லாகம் மகாவித்தியாலயம்]

அளவெட்டி தெற்கு பெருமாக்கடவையைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசையா அவர்கள் 27-04-1994 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியம் - நாகம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி சோதிமதியம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சிவாம்பிகை கணேசன் குலேந்திரன், குகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தசரதன் திருமதி வள்ளிநாயகி சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசன், திருமதி மதுரம், திருமதி புனிதவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு இன்று [28-04-1994] நண்பகல் 12 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. குகேந்திரன்
[மகன்]

பெருமாக்கடவை,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

[30630]


தென்னிந்திய திருச்சபை
யாழ் பேராயம்
## நம்பிக்கை இல்லம்
**(HOUSE OF HOPE)**

மேற்படி இல்லத்திற்கு உடல் வலுவற்ற, வலது குறைந்த [Physically Disabled] ஐந்து (5) வயதிற்கும், பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் குடும்ப விவரத்துடன் திருமதி P. கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயற்திட்ட பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை;

ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி 7942)



இணுவில் - கேண்டாவில் - மஞ்சத்தடி
## அருணகிரிநாத
## சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
## மகோற்சவ கால தொடருரைகள்

இன்று **28-04-94** தொடக்கம்
தினமும் மாலை 7 மணி தொடக்கம்
இரவு 8 மணி வரை
அருளுரை ஆற்றுபவர்:
**அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்**

— ஆலய பரிபாலன சபை.

விளம்பர அன்பளிப்பு!
இ. சண்முகநாதன்,
(கண்ணன் சிற்றி காமன்ஸ்),
மஞ்சத்தடி, இணுவில்.

[சி-7948]



தென்னிந்திய திருச்சபை - யாழ் ஆதினம்
## சாவகச்சேரி தொழிற் பயிற்சி நிலையம்

மேற்படி தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி, தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகிய நெறிகளில் பயிற்சி பெற விரும்புவோர் உங்கள் விண்ணப்பப் பத்திரங்களை காலை 9-00 மணி முதல் மதியம் 12-மணிவரை பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**'குரு இல்லம்'**
தென்னிந்திய திருச்சபை,
சாவகச்சேரி.

விண்ணப்ப முடிவு திகதி: 10 - 05 - 1994

குறிப்பு:
கடைசியாக முடிவடைந்த பயிற்சி நெறியில் பங்குபற்றி சான்றிதழ்களை பெறாதவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் உங்களது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

செயற்திட்டப் பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை,

ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி/7939)



ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய
# வெள்ளி விழா

இடம் :- ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய முன்றில்
காலம் :- **28 - 04 - 1994** இன்று வியாழக்கிழமை
மாலை 6.30 மணி

நிகழ்ச் நிரல்

- பாராட்டு விழா — இசைத்துறையில் பெரும் பணியாற்றும் திருவாளர் முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன் (கண்ணன்) அவர்களுக்கு நடைபெறும்.
- வெள்ளிவிழா மலர் வெளியீடு
- வருடாந்த பரிசளிப்பு விழா 1994
- இன்னிசை நிகழ்ச்சி — இன்னிசை வேந்தன் **பொன். சுந்தரலிங்கம் அவர்களின்** இன்னிசைக் கச்சேரி
- வாத்திய இசைவிருந்து — இசையமைப்பாளர் **திரு. மு. கோபாலகிருஷ்ணன் (கண்ணன்)** அவர்களுடன் புத்திரர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்

குறிப்பு: யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினரையும், மற்றும் கலைஞர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அறிவித்தல் அனுப்புவதற்கு போதிய அவகாசம் இல்லாததனால் மனம் வருந்துகின்றோம்.

நன்றி
இங்ஙனம்
ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய நிர்வாகத்தினர்

நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துவோர்:
**சிவகணேசன் புடைவை மாளிகை**
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(30629)


### ஆலயங்களில்

யாழ். வண்—வடமேற்கு சேசாவில் முத்துவிநாயகர் தேவஸ்தானத்தில் மண்டலாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறும். காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து பூசை, அன்னதானமும் நடைபெறும்.

மாலை 4 மணிக்கு பூசையைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை, திருவூஞ்சல் நடைபெற்று பூந்தண்டிகையில் விசேடமேள வாத்தியங்கள் சகிதம் விநாயகர் வீதி உலாவருவார். (க)

★ ★ ★

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 10 ஆம் திகதி இரதோற்சவம் இடம்பெறும். (உ-100)

### கப்பலில் செல்லும் நோயாளருக்கு

வியாழக்கிழமைகளில் கப்பலில் கொழும்பு செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட நோயாளர்களை, அந்தந்த வியாழக்கிழமைகளில் — இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் உடன் மதியம் 12.00 மணியளவில் யாழ். போதனா வைத்திய சாலையில் சமுகமளிக்கும்படி வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். மற்படி ஒழுங்கில் ஏதாவது மாற்றம் ஏற்படின் அதகுறித்து உடனடியாகத் தெரிவிக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.


வவுனியாவில்
அமைந்துள்ள
வடமாகாண
இணைக்கப்பட்ட
பல்கலைக்கழக
கல்லூரிக்கான
இலச்சினை

எமது பல்கலைக்கழகக் கல்லூரிக்கு இலச்சினை ஒன்றினை உருவாக்குவதற்காக வெள்ளைத்தாளில் கறுப்பு மையினால் வரையப்பட்ட இலச்சினையின் மாதிரிகளை மே மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன். இவ்விலச்சினை யாழ். பல்கலைக் கழகத்தின் இலச்சினையை ஒத்ததாயிருக்க வேண்டும். யாழ். பல்கலைக்கழக இலச்சினை நந்தியையும் குத்துவிளக்கையும் கொண்டுள்ளது. தெரிவு செய்யப்படும் இலச்சினையை வரைந்தவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

• பணிப்பாளர்·

புகையிரத நிலைய வீதி,
வவுனியா.

[சி-7947]


மக்கள் முன்னணி...
(3ஆம் பக்கத் தொடர்ச்சி)
நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேகாலை மாவட்ட எம்.பி. அத்தாவுட செனவிரத்ன பேசுகையில் சொன்னதாவது:

வடக்கு - கிழக்கு யுத்தம் ஏற்பட்டு பதினொரு வருடங்களாகி விட்டன. வடக்கு - கிழக்கு யுத்தம் முறையாக நடத்தப் படவில்லை. யுத்தம் நடைபெறும் 11ஆவது ஆண்டு தேர்தல் ஆண்டாகவும் உள்ளது.

இராணுவ பிரேஷ் - அதிகாரிகள் தங்கள் சொந்த நலன்களுக்கு யுத்தத்தை நடத்துகின்றார்கள். யுத்தம் அவர்களுக்கு ஒரு வியாபாரமாகி விட்டது — என்று அவர் கூறினார். (த-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி சிவலிங்கம்

ஏழாலை தெற்கு, விழிசிட்டியைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி சிவலிங்கம் 26 - 04 - 94 இரவு 7.20 மணியளவில் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. த. சிவலிங்கம் (இளைப்பாறிய கங்கவிசைலமதிப்பீட்டாளர்) அவர்களின் அன்பு மனைவியும், கணேசலிங்கம், (கொழும்பு), மகேஸ்வரலிங்கம் (பொறியியலாளர் (C.E.C.B). விமலேஸ்வரி, சர்வேஸ்வரலிங்கம் (U.K.), சுஜமுகலிங்கம் (சீநோர், பிரதி முகாமையாளர்), உருத்திரலிங்கம் (பொறியியலாளர் - ருவின்ஸ், சமக்கோன் நிறுவனங்கள்), இந்திரலிங்கம், காலஞ்சென்ற சிவனேஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராணி, பவளராணி, Dr. பத்மநாதன் (பல் வைத்தியர்), சுமித்ரலோசனி (U.K.), தவமணிதேவி (ரஜனி), காலஞ்சென்ற விமலாம்பாள், இராசமலர் (சந்திரா), கௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், யாழ். மாவட்டத்திற்குள் தற்போது வதியும் பிரதிகாஷ் (யாழ். வளாகம்), ஜனனி, செந்தூரன், அனுத்தமா, ரவிகுலன், நகுலன், மதுசூதனன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27 - 04 - 94 அன்று நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சி. உருத்திரலிங்கம்

மயிலணி,
சுன்னாகம்.

(7084)

### தம்பிமுத்து சோதிப்பிள்ளை

இணுவில் மேற்கைச் சேர்ந்த தம்பிமுத்து சோதிப்பிள்ளை 27-4-94 நேற்றுக் காலமானார்.

இவர் செல்லர் தம்பிமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், இராமநாதன், யோகம்மா (விக்லிமலர்), மற்றும் துரைராசா, ஞானமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தையா, சிவபாக்கியம், சின்னத்துரை, வல்லிபுரம் ஆகியோரின் மைத்துனியும், செல்வராசா, மகேஸ்வரன் (விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக் கழகம்), மனோகரன் (ஜேர்மனி), பாக்கியலட்சுமி, சுதிரமலை (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தாயாரும், ஜெயலட்சுமி, ரோகினி, சிவகுமாரி (ஜேர்மனி), சிவவடிவேல் ஆகியோரின் மாமியாரும், பவித்திரா, சேரன், கஙகைவேணியன், ராகவேந்தன், சிந்து, கீர்த்திசெங்கோன், நிகேதன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-4-94) முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. செல்வராசா
(பெறாமகன்)

காஞ்சியம் பதி,
இணுவில் மேற்கு.

(30635)

### பொன்னம்பலம் சிவசம்பு

மண்டைதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சிவசம்பு அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் விசாலாட்சி தம்பதிகளின் அருமை மகனும், திருமதி தங்கரெத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், காலஞ்சென்ற அன்னலெட்சுமி, கந்தையா ஆகியோரின் சகோதரரும், புஸ்பராணி, இந்திராணி (டெய்சி) [யாழ். மாநகரசபை], ஜெயராணி, பன்னீர்ச்செல்வன் (கனடா), விஜயகுமார் (கனடா), றஞ்சிதகுமாரி (யூலி), விஜயகுமாரி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், காலஞ்சென்ற அம்பலவாணர், நவரெட்ணசிங்கம், கோபாலசிங்கம், அருணாசலம், வசந்தமலர் (கனடா), சூரியகலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இல. 16, மடம் வீதி யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
நா. முனிஐயா
(மருமகன்)

இல 16,
மடம்வீதி,
யாழ்ப்பாணம்.

(30632)

### நவரட்ணம் மனோகரன்

(சந்திரா)

நாச்சிமார் கோயிலடி தலையாழியை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற நவரட்ணம் றோசலின் (றோசக்கா, முன்னாள் தாதி) ஆகியோரின் மகனுமான மனோகரன் (சந்திரா) நேற்றுக் காலமானார்.

இவர் நகுணராசா (கவுக்கா) (யாழ். மாநகர சபை மின்சாரப்பகுதி), நவமலர், சுகுமார் (இந்தியா), சுரேஷ்குமார் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மாலிஸ் ஸ்டெல்லா, இராஜகுலேந்திரன் (யாழ். மாநகர மின்சாரப்பகுதி), அமலா (வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் உமாகாந்த், ஸ்ரீகாந்த், ரூபகாந்த், யூலியன், சஜீவ் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு சிவன் வைத்தியசாலை, கே.கே.எஸ். வீதி இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
றொஸலின்
(தாயார்)

சிவன் வைத்தியசாலை,
352, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(30636)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28 - 04 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.